

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி 286 பயனாளிகளுக்கு ரூ.2கோடியே 91லட்சத்து14ஆயிரத்து 800 மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சாமிநாதன் உட்பட பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் ஆழ்வை கிழக்கு ஒன்றியம் வடக்கு ஆத்தூரில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தொடங்கி வைத்து கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி செலுத்தப்பட்டது. உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், கால்நடை பராமரிப்பு துறை மண்டல இயக்குநர் சஞ்சீவிராஜ், ஒன்றிய செயலாளர் ஏ.பி.சதிஷ் குமார், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், பில்லா ஜெகன், குரும்பூர் ஒன்றியம் நவீன்குமார், நகர செயலாளர் வாள் சுடலை, ஒன்றிய துணை செயலாளர் பகீர் மொகைதீன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அதிகமான வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக இணைக்க உறுதியேற்போம்!

# ஓரணியில் நின்று 'வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு'!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, ஜூன் 9 -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

கழகத்தின் வலிமையை மென்மேலும் கூட்டிட "ஓரணியில் தமிழ்நாடு" என்ற உறுப்பினர் சேர்ப்புத் திட்டத்தை உடன்பிறப்புகள் வீடு, வீடாகச் சென்று மேற்கொள்ள வேண்டும் என மதுரை பொதுக் குழுவில் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அதனைச் சிறந்த முறையில் செயல்படுத்த கழகத் தலைவர் தலைமையில் இன்று நடைபெற்ற, மாவட்டக் கழகச் செயலாளர்கள் - நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பின ர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றோம்.

கழக இளைஞர் அணியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை எடுத்துக்கூறி, "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கைக்கும் இளைஞர் அணி தனது முழு ஒத்துழைப்பை வழங்கிடும் எனவும் உரையாற்றினோம்.

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகம் மகத்தான வெற்றி பெற்று ஆட்சியைத் தொடர, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 30 விழுக்காடு களுக்கும் அதிகமான வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக இணைக்க உறுதியேற்போம்!

ஓரணியில் நின்று "வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு!"

இவ்வாறு துணை முதல்வர் தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### நாமக்கல் மாநகராட்சியில் ரூ.2.96 கோடியில் முடிவுற்ற 5 திட்டப்பணிகள்!

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் - முதல்வர் விரைவில் தொடங்கி வைக்க உள்ளார்!

## நாமக்கல்லில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜூன் 9 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தினை" விரைவில் தொடங்கி வைக்க உள்ளார்கள் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

நாமக்கல் மாநகராட்சி, முதலைப்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று (07.06.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச. உமா ஆகியோர் தலைமையில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் / நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், பாராளுமன்ற உறுப்பினர்கள் வி.எஸ். மாதேஸ்வரன் (நாமக்கல்), கே.இ.பிரகாஷ் (ஈரோடு), சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.2.96 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 5 திட்டப்பணிகளை திறந்து வைத்து, ரூ.8.30 கோடி மதிப்பில் 13 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

**ரூ.60 லட்சம் மதிப்பில் கூடுதல் கட்டிடம்!**

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்றைய தினம் முதலைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடமும், நாமக்கல் தொகுதி முதலைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடமும், சேந்தமங்கலம் தொகுதி பொட்டணம் பகுதியில் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார துணை மையம், சேந்தமங்கலம் தொகுதி பேளுக்குறிச்சியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், முத்துகாபட்டியில் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார துணை மையம், ராசிபுரம் தொகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் என ரூ.2.96 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 5 திட்டப்பணி களை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நாமக்கல் தொகுதி களங்காணி நத்தமேடு பகுதியில் 2 சுகாதார துணை மையம், பரமத்தி வேலூர் தொகுதியில் ஜேடர்பாளையம், நல்லூர் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம், மாணிக்கம்பாளையம், பாலப்பட்டி பகுதிகளில் வட்டார பொது சுகாதார அலகு, வேலகவுண்டம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம், திருச்செங்கோடு தொகுதி வையப்பமலையில் ஆரம்ப சுகாதார நிலையம், மல்லசமுத்திரம் பகுதியில் வட்டார பொது சுகாதார அலகு, கோழிக்கால் நத்தத்தில் சுகாதார துணை மையம், சேந்தமங்கலம் தொகுதி வரகூர், கொண்டமநாயக்கன்பட்டி பகுதியில் 2 சுகாதார துணை மையம், ராசிபுரம் தொகுதி நாமகிரிப்பேட்டையில் வட்டார பொது சுகாதார அலகு என ரூ.8.30 கோடி மதிப்பில் 13 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நாமக்கல் மாவட்டத்தில் ரூ.360.75 கோடி மதிப்பீட்டிலான மருத்துவத்துறை பணிகள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ரூ.2 கோடி செலவில் 8 நகர்புற நல வாழ்வு மைய கட்டிடங்கள், ரூ.3.51 கோடி செலவில் 14 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள், ரூ.5.96 கோடி செலவில் 13 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொது சுகாதார அலகுகள், செவிலியர் குடியிருப்பு மற்றும் கூடுதல் கட்டிடங்கள், ரூ.1.50 கோடி செலவில் குமாரபாளையம் அரசு மருத்துவமனையில், புறநோயாளிகள் பிரிவு, ஆய்வகம், விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சை பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு வசதிகள் கொண்ட புதிய கட்டிடம், ரூ.45 இலட்சம் செலவில் கொல்லிமலை அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி, ரூ.2.33 கோடி செலவில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில், சி.டி ஸ்கேன், சி ஆர்ம் ஆகிய கருவிகள்ரூ.345 கோடி செலவில் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய கட்டிடம் மற்றும் மருத்துவ சேவைகள் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அதேபோல ரூ.110.95 கோடி செலவில் 20 மருத்துவ கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் ரூ.23.75 கோடி மதிப்பில் பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகள் இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மிகசிறப்பான முறையில் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

நாமக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை பொதுமக்கள் அனைவரும் 100 சதவீதம் அரசு சேவையினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வகையில், ஏராளமான பொதுமக்கள் பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதை, நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தனியார் மருத்துவனையை விட கூடுதலான செயல்பாடுகள் இம்மருத்துவனையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல பரமத்தியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் ரூ.50 இலட்சம் மதிப்பில் கபிலர்மலை வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.33 இலட்சம் மதிப்பில் கூடச்சேரி துணை சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**ரூ.23 கோடியில் மாவட்ட தலைமை மருத்துவமனை!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ரூ.1,018 கோடி மதிப்பில் அமைக்கப்படும் என்று அறிவித்த நிலையில், நாமக்கல் மாவட்டத்தில் 2 அரசு தலைமை மருத்துவமனைகள் வேண்டும் என்ற கோரிக்கையினை பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் அவர்கள் வைத்தார். அதனடிப்படையில் ரூ.53.39 கோடி மதிப்பில் இராசிபுரம் அரசு மருத்துவமனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு தன்னிறைவு பெற்ற மருத்துவமனையாக பணிகள் நடைபெற்று வருகிறது. ரூ.23 கோடி மதிப்பில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு கட்டிடப்பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேபோல நாமக்கல் தொகுதி நரிக்குறவர் காலனியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம், மோகனூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையக் கூடுதல் கட்டிடம், வினைதீர்த்தபுரம் பகுதியில் வட்டார பொது சுகாதார அலகு, கீரம்பூர் பகுதியில் துணை சுகாதார நிலைய கட்டிடம், திண்டமங்கலம் பகுதியில் துணை சுகாதார நிலைய கட்டிடம் பணிகள் நடைபெற்று வருகிறது.

கொல்லிமலை, பள்ளிபாளையம் மற்றும் வெண்ணந்தூர் பகுதியில் தலா ரூ.3.50 கோடி மதிப்பில் புதிய மருத்துவ கட்டிடம் கட்டும் விரைவில் தொடங்கப்படவுள்ளது. தமிழ்நாட்டில் அதிகளவில் மருத்துவத் துறையில் கட்டிடங்கள் கட்டும் பணியில் உள்ள மாவட்டங்களில் நாமக்கல் மாவட்டமும் இடம்பெறும் என்கின்ற வகையில் இன்றைய தினம் பல்வேறு திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது. மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காக்கும் நம்மை காக்கும் 48, கலைஞரின் வரும் முன் காப்போம், இதயம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரைவில் நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற மிக மகத்தான திட்டம் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றது முதல் கடந்த நான்கு ஆண்டுகளில் அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் என்கின்ற வகையிலும், தமிழ்நாட்டி செயல்படுத்துகின்ற திட்டங்கள் அனைத்தும் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கு அடித்தளமான திட்டங்களாக அமைந்துள்ளது. இல்லம் தேடி கல்வி, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதலமைச்சரின் காலை உணவு திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் மற்ற மாநிலங்களிலும் செயல்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எனவே நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் சிறப்பான திட்டமாக அமையும். முழு உடல் பரிசோதனை மூலம் முழுமையாக உடலை பாதுகாக்கும் வகையில், அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகிறது.

**1256 இடங்களில் மருத்துவ முகாம்கள்!**

அந்த வகையில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறு மருத்துவம், மகளிர் மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், இருதயவியல், நரம்பியல் மருத்துவம், தோல், பல், கண், வாய் மருத்துவம், இயன் முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம் உள்ளிட்ட பிரிவுகளில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மிகச்சிறந்த கட்டமைப்பு உருவாக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட வுள்ளது. ஒரு வட்டாரத்திற்கு 3 என்கின்ற வகையில் 1164 இடங்களிலும், சென்னை மாநகராட்சியில் 15, 10 இலட்சத் திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் 20, 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் 57 என 1256 இடங்களில் முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

மேலும், மாற்றுத்திறனாளிகளின் மாற்றுத்திறன் சதவீதம் இம்முகாம்களில் கண்டறியப்பட்டு, வருவாய்த்துறை அலுவலர்களின் சான்றிதழ் பெற்று, அவர்களுக்கான ஆணைகள் வழங்கப்பட இருக்கிறது. காப்பீட்டு திட்டத்தின் புதிய காப்பீட்டு அட்டைகள் வழங்கப்படவுள்ளது. அனைத்து மருத்துவ சேவைகளும் ஒரு குடையின் கீழ் இருக்கும் வகையிலான திட்டம் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டமாகும்.

இத்திட்டத்தின் அறிவிப்பினை நாமக்கல் மாவட்டத்தில் அறிவிப்பதலில் மகிழ்ச்சியாக கருதுகிறேன் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.




தி.மு.க.
இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அறிவிப்பு

**ஒன்றிய-நகர-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

பெரம்பலூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.06.2025 திங்கள்கிழமை | காலை 9.00 மணி | பெரம்பலூர் | ஜி.கே.ரெசிடன்சி, வெங்கடேசபுரம், பெரம்பலூர். |
| | காலை 11.00 மணி | நீலகிரி | பிரீத்தி கிளாசிக் டவர்ஸ், குன்னூர் சாலை, உதகை. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 05-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


# தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. அறிவிப்பு!

*தருமபுரி, ஜூன் 9 -*

*தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் குறித்த மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. அறிக்கை வருமாறு:-*

*தருமபுரி தி.மு.க. கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (9.6.2025 - திங்கட் கிழமை) காலை 11.00 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் சி.செல்வராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.*



*இக்கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. கழகப்பணிகள் குறித்து சிறப்புரையாற்றவுள்ளார்.*

*அது சமயம் தொகுதி பார்வையாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள் :*

*1. காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள்,தொகுதி பார்வையாளர்கள் கூடத்தில் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனை குறித்தும்.*

*2. பூத் அளவிலான தேர்தல் பணிகுழு அமைத்தல் தொடர்பாகவும்.*

*3. பூத் அளவிலான இளைஞர் அணி நியமித்தல் குறித்தும்.*

*4. 2026 சட்டமன்ற தேர்தலுக்கான ஆக்க பணிகள் குறித்தும்.*

*இவ்வாறு வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட கூடலூர் ஊராட்சி மெயின் ரோடு பகுதியில் புதிய அங்கன்வாடி மையத்தினை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் துவக்கி வைத்து மரக்கன்றுகளை நட்டினார். உடன் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பொன். முத்தையா பாண்டியன் உள்பட பலர் உள்ளனர்.